# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

## பாராளுமன்றம்

---

# 1986 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மஹரகம சமாச சேவை சமிதி மத்திய மண்டலய (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*[1986, செப்ரெம்பர் மாதம் 05 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1986, செப்ரெம்பர் மாதம் 05 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்*

*விலை : சதம் 60* *தபாற் செலவு : சதம் 75*

## 1986 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மஹரகமை சமாசசேவை சமிதி மத்திய மண்டலய (கூட்டிணைத்தல்) சட்டம்

[1986 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 05 ஆந் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப் பட்டது.]

ச. வ. ஓ. 9/86

**மஹரகமை சமாசசேவை சமிதி மத்திய மண்டலயவைக் கூட்டிணைப்பதற் கானதொரு சட்டம்.**

முன்னுரை

"மஹரகமை சமாசசேவை சமிதி மத்திய மண்டலய" என அழைக்கப் படுவதும் அறியப்படுவதுமான கழகமொன்று, அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட கழகத் தோடு தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டு நடாத்தும் நோக்கத்துக்கென இதற்கு முன்னர் மஹரகமையில் தாபிக்கப்பட்டிருந்ததாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட கழகமானது எந்தப் பல்வேறு குறிக்கோள் களுக்காகவும் கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற் றியும் கொண்டு நடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப் பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்களின் நன்மைக்கானதாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1986 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மஹரகமை சமாசசேவை சமிதி மத்திய மண்டலய (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். *(சுருக்கப் பெயர்)*

2. இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும், (இதனகத்துப்பின்னர் "கழகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) மஹர கமை சமாசசேவை சமிதி மத்திய மண்டலயவின் தற்போது உறுப்பின னர்களாகவுள்ள அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இதன்மேல் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தகையோ ரான அத்தனை ஆட்களும், (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "மஹரகமை சமாசசேவை சமிதி மத் திய மண்டலய" என்னும் பெயர் மகுடத்தின்கீழ் இடையறுவுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாகவிருத்தல் வேண்டும் ; அத் துடன் அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் அது வழக்குத் தொடுக்கலாம் என்பதோடு அதற்கு எதிராக வழக்குத் தொடுக்கவும்பட லாம். அத்துடன் பொது இலச்சினை ஒன்றை வைத்திருக்கவும் பயன்படுத் தவும் அவர்கள் விரும்பியாங்கு அந்த இலச்சினையை மாற்றவும் அது முழுத் தத்துவமும் அதிகாரமும் உடையதாதல் வேண்டும். *(மஹரகமை சமாசசேவை சமிதி மத்திய மண்டலயவைக் கூட்டிணைத்தல்.)*

3. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாயிருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின் றது :— *(கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.)*

(அ) மக்களின் சமூக, பொருளாதார தரத்தைச் சீராக்குதல் ;

(ஆ) சமய, சமூக, கலாச்சார, கல்விசார், சுகாதார, விளையாட்டு நட வடிக்கைகளுக்கு ஊக்கமளித்தல், உதவி செய்தல் அத்துடன் அவற்றை ஒழுங்குபடுத்தல் ;

(இ) பரஸ்பர நன்மை, சேமநலன் அத்துடன் சமூகசேவை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள எல்லாக் கழகங்களிடையேயும் ஒத்துழைப்பையும், சிநேக உறவினையும் மேம்படுத்தல்;

(ஈ) அதன் குறிக்கோள்களை எய்துவதற்கென அரசிடமிருந்தும் வேறு ஒழுங்கமைப்புக்களிடமிருந்தும் உதவியைப் பெற்றுக்கொள்ளுதல்.

*கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.*

4. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்திற்கும் அமைய, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கும் முன்னேற்றுவதற்கும் அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தகையனவுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், காரியங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும், கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவங்களுள், வங்கிக் கணக்குகளைத் தொடங்கவும், நடாத்தவும், முடிவுறுத்தவும், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி பணங்களைக் கடனெடுக்கவும் அல்லது திரட்டவும், அளிப்புக்களையும் கொடைகளையும் பெறவும் அல்லது சேகரிக்கவும், அதன் நிதிகளை முதலீடுசெய்யவும், அத்துடன் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான ஆளணியினரை வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்தல், வேலை நீக்கஞ்செய்தல் ஆகியவற்றுக்கும் ஆன தத்துவங்களும் அடங்கும்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

5. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கான விதிகளுக்கமைய, அத்தகைய விதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டு அதற்கிணங்கத் தெரிவுசெய்யப்படக்கூடியவர்களான பதவிதாங்குநர்களையும், அத்தகைய வேறு ஆட்களையும் கொண்டமைந்த நிறைவேற்றுக் குழுவொன்றினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது நிறைவேற்றுக் குழு, இச்சட்டம் தொடங்கும் நாளுக்கு நேர்முந்திய நாளன்று பதவிவகிக்கும் கழகத்தின் நிறைவேற்றுக் குழுவாதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் விதிகள்.*

6. (1) அந்நோக்கத்துக்கென கூட்டப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விசேட பொதுக்கூட்டம் ஒன்றிலும் சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றிலிரண்டுக்குக் குறையாதோரின் வாக்குகளைக் கொண்டு, உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ளுதல், மீளப்பெறுதல், விலக்குதல் என்பனவற்றுக்காகவும், பதவிதாங்குநர்களையும், நிறைவேற்றுக் குழுவையும் தேர்ந்தெடுப்பதற்காகவும், அலுவல்களைக் கையாளுவதில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறைக்காகவும், பொதுவில் வேறுவகையாக கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்வதற்காகவும் அதன் குறிக்கோள்களை எய்துவதற்காகவும் இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாக இராத விதிகளை காலத்துக்குக் காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும். அத்தகைய விதிகள் ஆக்கப்பட்டதும், அவை அதே போன்ற கூட்டமொன்றிலும் அதேபோன்ற முறையிலும் மாற்றப்படலாம், திருத்தப்படலாம், நீக்கப்படலாம் அல்லது அவற்றிற்கு எதுவும் சேர்க்கப்படலாம்.

(2) கூட்டுத்தாபன உறுப்பினர்கள் எல்லா நேரங்களிலும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கான விதிகளுக்கு அமைந்தோராகவிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படற்பாலனவும் அதற்குச் செலுத்தப்படற்பாலனவுமான கடன்கள்.

7. இந்தச் சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர் முந்திய நாளன்று கழகத்திற்குள்ள எல்லாக் கடன்களும் பொறுப்புகளும் இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் கொடுத்துத்தீர்க்கப்படுதல் வேண்டுமென்பதுடன் கழகத்துக்கு வருமதியான எல்லாக் கடன்களும், அதற்குச் செலுத்தப்படற்பாலனவான ஒப்பப்பணங்களும் உதவு தொகைகளும், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படலும் வேண்டும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களை வைத்திருக்கலாம்.

8. கூட்டுத்தாபனமானது, ஏதேனும் கொள்வனவு, அளிப்பு, நன்கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு ஆகியவற்றின் பயனைக் கொண்டு அல்லது வேறுவகையாக அதற்கு உரித்தாக்கப்படக்கூடிய அசைவுள்ள, அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைப் பெறவும் வைத்திருக்கவும் சட்டப்படி இயலுமானதாதலும் ஆற்றல் உடையதாதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய எல்லா ஆதனங்களும், அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையாளவுள்ள முழுத்தத்துவத்துடன், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும், கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கான விதிகளுக்கமையவும், கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

9. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, செயலாளரின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும் என்பதுடன், நிறைவேற்றுக்குழுவின் அங்கீகாரத்துடனும், நிறைவேற்றுக்குழுவின் உறுப்பினர்களின் முன்னிலையிலும் அன்றி எத்தகையதுமான எந்தச் சாதனத்திலும் இடப்படலாகாது. அவர்கள் தாம் சமுகமளித்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் தமது பெயர்களை எழுதிக் கையொப்பமிடல் வேண்டும். அத்துடன் அத்தகைய கையொப்பமிடுதல், சாட்சியாக எவரேனும் ஆள் கையொப்பமிடுவதற்குப் புறம்பானதாயிருத்தல் வேண்டும்.

குடியரசினதும் ஏனையோர்களினதும் உரிமைகளைப் பேணுதல்.

10. இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும், குடியரசினது உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும், இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள் மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமைகோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களினது உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ பாதித்தலோ ஆகாது.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.